
# புயல்காத்துப்பாட்டும் பஞ்சக் கும்மியும்

30294



ஆசிரியர்கள்
சாமிநாதப்புலவர்
வரகவி அருணாசலம்

தொகுப்பாசிரியர்
புலவர் செ. இராசு

கொங்கு இலக்கிய வரிசை 1.

# புயல்காத்துப் பாட்டும் பஞ்சக் கும்மியும்

ஆசிரியர்கள்
வெங்கம்பூர் சாமிநாதப்புலவர்
வெண்ணந்தூர் வரகவி அருணாசலம்

பதிப்பாசிரியர்
புலவர் செ. இராசு பிஎச்.டி.,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு
கொங்கு ஆய்வு மையம்,
பி-4, தமிழ்ப் பல்கலைக்கழகக் குடியிருப்பு,
தஞ்சாவூர் 613 005.

கொங்கு இலக்கிய வரிசை 1

வெளியீடு : 19.7.1997.

பதிப்பாசிரியர் :

புலவர் செ. இராசு பிஎச்.டி.,
தலைவர், கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

நூல் கிடைக்குமிடம் :

கௌரி ராசு,
கொங்கு ஆய்வு மையம்,
பி-4, பல்கலைக் கழகக் குடியிருப்பு,
தஞ்சாவூர் - 613 005.
(தொலை பேசி : 04362 - 73508)

விலை ரூ. 15.00

அச்சிட்டோர் :
அறிவொளி பதிப்பகம்,
ஈரோடு - 638 001.
(தொலை பேசி : 0424 - 210855)

# பதிப்புரை

பேரிலக்கியங்களையும், இலக்கண நூல்களையும், பல்வேறு சிற்றிலக்கியங்களையும் புலவர் பெருமக்கள் காலந்தோறும் பாடித் தமிழுக்கு அணி சேர்த்துள்ளனர். அவர்கள் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுத் திகழுகின்றனர்.

பிற்காலத்தில் தமிழக நாட்டுப்புறங்களில் வாழ்ந்த புலவர்கள் சிலர் தம் காலத்தில் நடைபெற்ற உள்ளம் கவர்ந்த சில நிகழ்ச்சிகளைப் பாடலாக்கிப் பாடி மகிழ்ந்துள்ளனர். அவைகளைக் கேட்டு மகிழ்ந்த மக்கள் அப்புலவர்களை ஆதரித்தனர். அப்பாடல்களில் பல ஓலைச்சுவடிகளிலும், காகிதங்களிலும் எழுதப்பட்டு இன்றும் நிலவுகின்றன. சில அச்சேறியும் உள்ளன.

கொலை, தற்கொலை, விபத்துக்கள், கொள்ளை, பெருவெள்ளம், பூகம்பம், வழக்கு, பஞ்சம், புயல், தெய்வீக நிகழ்ச்சிகள், பிற இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் ஆகியவை அவர்களின் பாடு பொருள்களாக அமைந்தன. ஆனால் இவற்றைப் பாடிய புலவர்கள் பற்றிய வரலாறு இலக்கிய வரலாற்று நூல்களில் இடம் பெறவில்லை.

புயல் காற்றைப் பற்றியும், பஞ்சம் பற்றியும் பாடப்பட்ட சுவையான மூன்று பாடல் தொகுதிகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை *18* ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் *19* ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலும் பாடப்பட்ட கொங்குநாட்டு இலக்கியங்களாகும்.

இவைகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாத்துப் பெயர்த்தெழுதி வைத்திருந்து இப்பதிப்பின் பொருட்டு அளித்தவர் தேசியப் போராட்ட வீரர், அலிப்புரம் சிறை புகுந்தவர், நாட்டுநலப்பற்றாளர், ஊமையாம்பட்டிக் கவிஞர் இராசிபுரம் ந. கந்தசாமி அவர்களாவார்கள். ஊமையாம்பட்டி நஞ்சப்பமுதலியார் அவர்களின் திருமகனாராகத் தோன்றிக் கொங்கு இலக்கியக் காவலராகத் திகழும் இவர் இப்புயல், பஞ்சம் பற்றிய பல பாடல்களை நேரில் காணும் போதெல்லாம் உள்ளம் உருக உணர்ச்சியுடன் பாடிக் காட்டுவார். அவருக்குக் கொங்கு ஆய்வு மையம் தன் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறது.

# புயல்

1793 ஆம் ஆண்டு தமிழகத்தில் வீசிய புயல் பற்றிய பாடல்களை ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம் வெங்கம்பூரைச் சார்ந்த சுப்பணகவுண்டர் என்பவரின் மகன் சாமிநாதன் என்பவர் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் குடியேறி வாழ்ந்தபோது பாடியுள்ளார். இந்நூலில்

| | | |
|---|---|---|
| அந்தியூர் | சிதம்பரம் | நாமக்கல் |
| ஆமூர் | சிறுமுகை | நீலகிரி |
| ஆர்க்காடு | சீரங்கம் | பரமத்தி |
| இடையாறு | சீலாப்புத்தூர் | பவானி |
| ஈரோடு | சென்னப்பட்டணம் | பழனி |
| எருமைப்பட்டி | சேர்வராயன்மலை | பாண்டமங்கலம் |
| கண்ணாடிப்புத்தூர் | சேலம் | புதுக்கோட்டை |
| கருவூர் | டெங்கணிக்கோட்டை | புதுச்சேரி |
| கள்ளிக்கோட்டை | தஞ்சாவூர் | புதுப்பாளையம் |
| கன்னிவாடி | தருமபுரி | பொத்தனூர் |
| காங்கயம் | தாத்தய்யங்கார்ப்பேட்டை | மணல்க்காடு |
| காளப்பநாயக்கன்பட்டி | திண்டுக்கல் | முசிறி |
| குத்தாலம் | திருச்சிராப்பள்ளி | முத்தரசன்பேட்டை |
| கும்பகோணம் | திருச்செங்கோடு | மோகனூர் |
| குளித்தலை | திருப்பராய்த்துறை | மைசூர் |
| கூடமரெட்டியூர் | திருவையாறு | வாங்கல் |
| கூறைநாடு | துறையூர் | விருப்பாச்சி |
| கொல்லிமலை | தெத்துக்காடு | வேலூர் |
| கோயமுத்தூர் | நங்கவரம் | |
| சங்ககிரி | நாகப்பட்டினம் | |

ஆகிய 58 ஊர்களில் வீசிய புயல் ஏற்படுத்திய சேதம், நிகழ்வுகள், மக்கள்பட்ட துயர் ஆகியவை கூறப்பட்டுள்ளன. செய்திப் போக்குவரத்து அதிகம் இல்லாத அந்நாளில் தமிழகத்தின் பல ஊர்ச் செய்திகள் மோகனூரில் வாழ்ந்த புலவருக்கு எவ்வாறு தெரிந்தது என்பது வியப்பாக உள்ளது. பொதுவாகக் கொங்கு நாடு போன்ற உள்நாட்டுப் பகுதியில் புயலின் சேதம்

அதிகமாக இருக்காது. ஆனால் 1793 ஆம் ஆண்டு புயல் உள்நாட்டிலும் அதிக சேதத்தை விளைவித்துள்ளது தெரிகிறது.

இந்நூல் 25.3.1793 ஆம் ஆண்டு (பரிதாபி பங்குனி 16) பாடப்பட்டது. காத்து நொண்டிச் சிந்து, கோணக்காத்துப்பாட்டு, காத்துப்பாட்டு, புயல்காத்துப்பாட்டு எனப் பலவாறு இந்நூல் குறிக்கப் பட்டாலும் எளிமையும் பொருள் விளக்கமும் கருதிப் புயல்காத்துப்பாட்டு என்ற பெயர் எடுத்தாளப்பட்டது.

நூல் அச்சாகுங்கால் மற்றொரு ஏடடுப் பிரதி நாமக்கல் உரவணிகர், தமிழ் ஆர்வலர் திரு. என். பி. இராமசாமி அவர்கள் மூலம் கிடைத்தது. நாமக்கல் பல்துறை அறிஞர் புலவர் தே.ப. சின்னசாமி அவர்கள் அளித்த பிரதியாகும்.

## பாரதியார் பாடல்

தேசியகவி சுப்ரமணிய பாரதியார் நள வருடம் கார்த்திகை மாதம் 8 ஆம் நாள் புதன்கிழமை வீசிய புயல் காற்றைப் பற்றிக் கணவன் மனைவி கூற்றாகப் பாடியுள்ளார்.

மனைவி - காற்ற டிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகமே
தூற்றல் கதவு சாளரம் எல்லாம்
தொளைத்த டிக்குது பள்ளியிலே

கணவன் - வானம் சினந்தது வையம் நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே
தீனக் குழந்தைகள் துன்பப் படாதிங்கு
தேவி அருள்செய்ய வேண்டுகிறோம்.

மனைவி - நேற்றிருந் தோம்அந்த வீட்டினிலே இந்த
நேரம் இருந்தால் என் செய்வோம்
காற்றென வந்தது கூற்றமிங்கே நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ ?

## மாபுயற் சிந்து

புதுக்கோட்டை புள்ளான் விடுதியைச் சேர்ந்தவர் அ.வெ. நடேசக்கோனார் சமுதாயத்தில் தோன்றும் அன்றாடப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு தனக்கேயுரிய இசைநடையில் இலாவணி, சிந்து இசைகளில் பாடல் இயற்றிச் சிறுசிறு நூல்களாக்கி மக்கள் மத்தியில் தானே

பாடிக்காட்டி அதனைக் காசாக்கி அதிலேயே வாழ்ந்து வந்தவர். 1942 முதல் 1955 வரை படைப்புகளைக் கொண்டு வந்த நடேசக்கோனார் 1956 இல் காலமானார்.

நந்தன ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் நாள் திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் வீசிய கடும் புயலைப்பற்றி மாபுயற் சிந்து என்ற பாடல் தொகுதியை நடேசக் கோனார் பாடினார். இதன் முதல் பாகம் புள்ளான் விடுதி பு.கா. காதர் இப்ராம்சா ராவுத்தர் அவர்களால் 1953 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. முழுமையாக 1994ஆம் ஆண்டு பேராவூரணி சி. துரைமாணிக்கம் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது. இம் மாபுயற்சிந்து 33 பாடல்கள் அடங்கியது.

மச்சுவீடும் இடிந்ததே மாடிவீடும் நொடிஞ்சுதே
குச்சுவீடும் ஒடிஞ்சுதே குடிசை வீடும் முடிஞ்சுதே

சிகப்புச்சீமை ஓடெல்லாம் சின்னாபின்னம் ஆச்சுதே
தகப்பன் நாட்டு ஓடெல்லாம் தாறுமாறாப் போச்சுதே

மாங்காய்காச்ச மரங்களெல்லாம் மலைமலையாய்ச் சாஞ்சுதே
தேங்காய் காச்ச மரமெல்லாம் தேருத்தேராச் சாஞ்சுதே

பாட்டன்வச்சுக் காய்ச்சுதே பலாவும்வேம்பும் போச்சுதே
பூட்டன்வச்சுக் காய்ச்சுதே புளியந்தோப்பும் போச்சுது

## கல்வெட்டு

பாண்டிச்சேரி மாநிலம், மண்ணடிப்பட்டுக் கொம்யூன், திருக்காஞ்சி கங்கைவரேசுவரர் திருக்கோயில் கல் ஒன்றில் முதலாம் குலோத்துங்க சோழனின் 40, 44 ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. 1110, 1114 ஆம் ஆண்டைச் சேர்ந்த அக்கல்வெட்டுக்கள் மைய அரசின் தொல்லியல் துறைக் கல்வெட்டுப் பிரிவினரால் படி எடுக்கப்பட்டுள்ளன. (ARE 215, 216 of 1919) இக்கல்வெட்டுப் படிகளைத் தந்துவிய பாண்டிச்சேரி, பிரெஞ்சு இந்தியவியல் ஆய்வு மன்றத்திற்கு நன்றி உரியதாகுக.

### முதல் கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ வீரமே துணையாகவு
2. ம் தியாகமேய் அணியாகவும் செங்

3. கோலோச்சிக் கருங்கலி கடிந்து
4. புகழ்மாது விளங்க ஜயமாது விரும்
5. ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர
6. உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
7. மீனவர் நிலைகெட வில்லவர் கு
8. லைதர ஏனை மன்னவர் இரியலுற்
9. றிழிதர திக்கனைத்தும் தன் சக்கர ந
10. டாத்தி வீரஸிம்ஹாஸன த்து அவநி
11. முழுதுடையாளொடும் வீற்றிருந்த
12. ருளிய கோவிராஜகேசரி பன்மரான
13. திரிபுவனச் சக்கரவ த்திகள் ஸ்ரீ குலோ
14. த்துங்கசோழ தேவற்கு யாண்
15. டு 40 தாவது திரிபுவனமாதே
16. விச்சருப்பேதி மங்கலத்து ஏரி
17. நிறையேரியிலே பெருங்காற்றடி
18. த்துக் குலையழிந்து கெட்டமையில்
19. இக்கரையும் அட்டுவித்துக் குலோத்
20. துங்க சோழநென்னும் திருநாமத்தால் க
21. ற்படையுஞ் செய்து இத்தன்மம் சந்திராதித்த
22. வற் நிற்கச் செய்தான் பூதமங்கலமுடை
23. யான் ஒற்றியூரன் பூபாலசுந்தரனான சோழ
24. கோனார் இவற்க்கா இக்கற்படை செய்வித்
25. தான் ராஜேந்திர சோழ வளநாட்டு இடை
26. வளநாட்டுச் சேவகலூருடையாந் அரை
27. யன் திருமழபாடியுடையாநான மலைய
28. ப்பியராஜன் இத்தன்மம் மஹாஸபையார் ர
29. க்ஷை

## இரண்டாம் கல்வெட்டு

1. ஸவஸ்திஸ்ரீ சோழகோனார் கடையீட்டி
2. ன்படி யாண்டு 44 கங்கைகொண்ட சோ
3. ழவளநாட்டு வீராவதார வளநாட்டுத் திரிபுவந
4. மாதேவிச் சருப்பேதிமங்கலத்து ஸபையார்

5. காணிப்பணிக்கச் சோழகோன் அறிவித்ததாவது தங்
6. களூர் ஸ்ரீ வீரநாராயணப் பேரேரிக்கு முன்பு ஏரி மாவிறை
7. யாய் வருகிற நெல்லு ஊரொட்டிலும் வரிமுதலிலு
8. ங் கூடி கற்படை யின்றியே நிறை ஏரியிலே பெருங்
9. காற்றடித்து கரையழிந்து கெட்டமையில் இவ்வே
10. ரி குலோத்துங்கசோழன் கற்படையுஞ் செய்து
11. மண் கல்லிக் கரையட்டுகைக்கும் ஏரி மாவிறைக்கு
12. ச் சிலவாக நில நிமந்தமாக விடுக என்று திருவாய்
13. மொழிந்தருளினமையில் தங்களூர்ப் பிடாகை நெ
14. ட்டைப்பாக்கமாந பூபாலசுந்தரநல்லூர் மதுராந்தக
15. வதிக்கு மேற்கும் வீரநாராயண வாய்க்காலுக்குத் தெற்கும்
16. முஞ்சியாற்றுக்கு வடக்கும் பரகேஸரிவதிக்குக் கிழக்கு
17. ம் நடுவுபட்ட நீர்நிலமுங் கொல்லை நிலமும் கரு
18. மாணிக்கநல்லூரான சோழகோநல்லூர் திரிபுவ
19. ன மாதேவிவதிக்கு மேற்கும் வீரநாராயண வாய்க்
20. காலுக்கு வடக்கும் ராஜகேஸரிவதிக்குக் கிழக்கும் வட
21. க்கில் இரண்டறுதிக்கு தெற்கும் வடக்கு இவ்வூர்க்கு உ
22. டலான நிலமும் நடுவுப்பட்ட நீர்நிலமும் கொல்லை நி
23. லமும் இவ்விரண்டூரிலும் நீர்நிலத்தாலும் கொல்லை
24. நிலத்தாலும் வந்த கடமை ஊரொட்டிலும் வரிமுதலிலு
25. ம் தவிர்த்து குலோத்துங்கசோழந் கற்படையும் செய்து
26. மண் கல்லிக் கரையட்டுகைக்கும் உடலாக விட்டேன் தாங்
27. களும் இப்படி விட்டு நடுவிற் கோயிலும் ஏரியிற் கற்ப
28. டையிலும் கல்லும் வெட்டி இத்தர்மம் ஸந்திராதித்தவற்செ
29. ல்லப் பண்ணுக இவை சோழகோன் எழுத்து இவைபுரவுவரி
30. திணைக்களநாயகம் விளக்கொளி மங்கலமுடையா
31. ந் உத்தமந் உய்யநின்றாடிநான் எழுத்து ஓலை எழு
32. தும் அழகியசோழ மூவேந்தவேளான் எழுத்து

## பஞ்சம்

இந்நூலில் உள்ள பரிதாபி, கர வருஷப் பஞ்சக் கும்மிகளைப் பாடியவர் அருணாசலம் என்பவர். நாமக்கல் மாவட்ட வெண்ணந்தூரில் செங்குந்த குலத்தில் தோன்றியவர். நமச்சிவாய முதலியாரின் மகன். குற்றம்

பொறுத்த குருசாமியின் சீடனாகக் குறிக்கப்படுகிறார். பேளுக்குறிச்சிப் பெருவள்ளல் வேலப்பகவுண்டரால் ஆதரிக்கப்பட்டவர். இவர் வரகவி, வரகவிராயர் எனப்புகழப்பட்டவர். இவர் பாடிய இந்நூல் வண்ணக்கும்மி, வண்ணத்தருவு என்று கூறப்பட்டுள்ளது.

பரிதாபி வருடத்திலும் (1853) தொடர்ந்து பிரமாதீச, ஆனந்த, ராட்சத, நள, பிங்கள, காளத்தி, சித்தாத்திரி, இரவுத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரத்தாட்சி, குரோதன ஆண்டுகளிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சம் பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது.

குரோதன வருடம் (1866) முதல் கும்மி நூல் பாடப்பட்டது என்பது
''குரோதன வருஷம் மார்கழி மாதம்
கூறு பஞ்சக்கும்மி''

என்ற தொடரால் புலனாகிறது. இப்பஞ்சம் 14 ஆண்டுகள் வரை நீடித்துள்ளது. இறையனார் களவியல் உரையில் ''அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது'' என்று கூறப்படுவதைக் காணுகிறோம்.

பஞ்ச காலங்களில் மக்கள் எவ்வாறெல்லாம் துன்பப்பட்டனர் என்பது மிக உருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பல தொழில்களைச் செய்யும் சமூகத்தார் தம் குலத்தொழிலுக்குரிய அடிப்படைக்கருவிகளைக்கூட விற்றோ அல்லது அடைமானம் வைத்தோ பிழைத்தனர் என்பதால் பஞ்சத்தின் கொடுமையை அறிகிறோம். இன்னும் சிலர் உணவு கிடைக்காத காரணத்தால் தம் குலத் தொழில் செய்ய வலிமை இல்லை என்று கூறியுள்ளனர்.

கும்பத்தில் சனி, செவ்வாய், இராகு இவைகள் வந்து கூடியதால் பஞ்சம் வந்தது என்று கூறப்படுகிறது. பஞ்சம் எப்போது நீங்கும் என்று சிலர் பல்லி சகுனம், சோதிடம் பார்த்துள்ளனர்.

கோர்ட்டார், சர்க்கார்துரைமார்கள், சிரஸ்தார், கணக்கர் முதலிய அரசு தொடர்புடையோர் செய்த பஞ்ச நிவாரணப் பணிகள் கூறப்பட்டுள்ளன. சேலம் போன்ற இடங்களில் கஞ்சித் தொட்டிகள் வைக்கப்பட்டன.

கபிஸ்தலம் மூப்பனார் சத்திரம், ஐயம்பாளையம் சத்திரம், சத்திரம் ரெட்டியார் சத்திரம் ஆகிய இடங்களில் உணவளிக்கப்பட்ட விபரம் கூறப்படுகிறது. ராசாமுதலியார் என்ற தானிய வணிகர் தானியம்

கொடையளித்துள்ளார். (இவர் சேலம் செவ்வாய்ப்பேட்டையைச் சேர்ந்தவர்)

ஆட்டையாம்பட்டி ஆதித்தவாரச் சந்தை

அயோத்திப்பட்டணம் சந்தை

அமரகுந்திச் சோமவாரச் சந்தை

திருச்செங்கோட்டுச் செவ்வாய்க்கிழமைச் சந்தை

திங்களூர்ச் சந்தை

சத்திரம் புதன் சந்தை

ஆகிய சந்தை பற்றிய விபரங்கள் உள்ளன.

மக்கள் பஞ்சகாலத்தில் சாப்பிடக் கூடாத பொருள்களைச் சாப்பிட்டு அவதிப்பட்டுள்ளனர். நிலாவரை நிலாவரை விதை, சீனிக்கத்தாழைக்கிழங்கு, சதுரைப்பழம், கூந்தல்பனையூன், முன்னைத்தழை - அரும்பு, சீனிக்கிழங்கு, காரைத்தழை, காட்டுக்கொள், மத்தங்காய், புல்லரிசி, கல்லிச்சிக்காய் ஆகியவைகளைச் சாப்பிட்டுள்ளனர்.

முத்துச்சம்பா, சன்னச்சம்பா, சீரகச்சம்பா, குண்டஞ்சம்பா, கல்லமுத்தாப் போன்ற உயர் வகை அரிசி சாப்பிட்ட மேன்மக்கள் கூட கூழும், ராகிக்களியும், கீரையும் கிடைக்காமல் அவதிப்பட்டனர்.

இந்நூலில் பேச்சு வழக்குச் சொற்கள் பல பயின்று வந்துள்ளன. (ரக்கிரி, தாட்டுச்சு, பசங்கள், பீத்தல், புளிஞ்சு, சிக்கவில்லை, சோத்துக்கு, பத்தவில்லை, ரண்டு)

பஞ்சம் பற்றிய சில இலக்கியச் செய்திகள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

## மேழி விளக்கம்

இந்நூல் சரவணையா என்பவரால் பாடப்பட்டது. கலிவெண்பாவால் அமைந்த 621 கண்ணிகளை உடையது. கொடியோர் ஆட்சியின் காரணமாகக் கொங்கு நாட்டில் பெரும் பஞ்சம் வர வேளாளர்கள் இடும்பக்குமரன் வழியாகச் சென்னிமலை முருகனை வேண்டி மழை பெற்று வளமாக வாழ்ந்த வரலாறு கூறப்படுகிறது. என் ஆசிரியப் பெருந்தகையார் எழுமாத்தூர் வேலம்பாளையம் பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களால் 1963 ஆம் ஆண்டு பதிக்கப்பட்டது.

வெள்ளிப்பொன்னுச் செம்புதரா வெண்கலம்பித் தளைஈயம்
உள்ள நவனிதியம் ஒன்பதுடன் -மெல்லக்

கடற்படு திரவியமும் காடுவனம் சோலை
திடற்படு திரவியமும் சேரவிற்று -அடைவுடனே

வட்டில்மொந்தை ஆபரணம் மாடெருது ஆடெருமை
தட்டுபுல்லு விற்றுத் தணியாமல் - வெட்டி வைத்த

சொந்தக் கிணறுவிற்று ஞொல்புவியா தீனமெல்லாம்
இந்தவித மாகவிற்று ஒழிந்தனம்காண் - அந்தணரும்

தாரை நிலம் பூசைபெட்டி தவளைசொம்பு விற்றிழந்து
ஊரை விட்டு யாத்திரைக்கு ஓடினார் - பாரதனில்

சத்திரிய ரானார் தரணி தனைஇழந்து
கத்திகளை விற்றீந்தார் காசினியில் - வைத்ததன

செட்டிகளும் கெட்டலைந்து திராசுபடிக் கல்முதலாய்
ஒட்டுத் தொகையாய்விற்று ஒழிந்தனர்காண் - ரெட்டிகளும்

தரிப்புநிலை இல்லாமல் தாசரைப்போல் நாமம்இட்டு
திருப்பதி யாத்திரைக்கு சென்றார்கள்.....

தாசர்களும் ஆண்டிகளும் சங்குசே கண்டிவிற்றார்
வேசியர்கள் சேலைமுதல் விற்றீந்தார்.....

குசவன் திரிகையொடு குண்டுக்கல் லுப்பலகை
நிசமாக விற்றீந்தான் நீணிலத்தில் - அசகன்எனும்

வண்ணானும் சார மண்ணுடனே - வெள்ளாவி
குண்ணாந்தா ளியும்விற்றுக் கொடுத்தான்- மண்மீதில்

கடைக்கருவி யானோர்கள் கத்தி குடுக்கை
அடைப்பமது விற்றீந்தார் அவனி தனில் - நடப்பர் எனும்

பண்டிதரும் கூத்தர் பாரில் இசைக்குரியோர்
தண்டமிழ்தே ரும்தொழிலைத் தவிர்த்து விட்டார்.....

## மலையருவி

சென்னை மாவட்ட ஆட்சியராக விளங்கிய பர்சி மாக்வின் ஐ.சி.எஸ்., அவர்கள் தொகுத்த நாட்டுப்புறப் பாடல்களின் தொகுதியைத் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்துக்காகக் கி.வா.ஜகந்நாதன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு பதிப்பிதுள்ளார்.

தாது வருஷப் பஞ்சத்திலே - ஓ சாமியே
தாய் வேறே பிள்ளை வேறே - ஓ சாமியே
தைப் பொங்கல் காலத்திலே - ஓ சாமியே
தயிருக்கும் பஞ்சம் வந்ததே - ஓ சாமியே
மாசி மாதத் துவக்கத்திலே - ஓ சாமியே
மாடுகளும் பட்டினியே - ஓ சாமியே
பங்குனி மாதக் கடைசியிலே - ஓ சாமியே
பால் மாடெல்லாம் செத்துப்போச்சே - ஓ சாமியே
சித்திரை மாசத் துவக்கத்திலே - ஓ சாமியே
சீரெல்லாம் குலைந்து போச்சே - ஓ சாமியே
ஆத்திலேயும் தண்ணியில்லை - ஓ சாமியே
குளத்திலேயும் தண்ணியில்லை - ஓ சாமியே
கஞ்சித் தொட்டி போட்டார்களே -ஓ சாமியே
அன்புடன் சலுக்கார் தானே -ஓ சாமியே

## தாது வருஷக் கரிப்புக்கும்மி

கள்ளப்புலியூரில் ஆசாரிமார்களுக்குக் குருவாக விளங்கிய மலைமருந்தன் என்பவர் 1876 ஆம் ஆண்டு தாது வருடப் பஞ்சம் பற்றிய கும்மிப் பாடல்கள் பாடியுள்ளார். 117 கண்ணிகள் கொண்ட அந்த நூலை 1985 ஆம் ஆண்டு தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்காக நூலக வடமொழிப் பண்டிதர் திரு. என். சீனிவாசன் அவர்கள் பதிப்பித்துள்ளார்.

உண்ணும் கலங்களை விற்பாரும்
உடமை களையெல்லாம் விற்பாரும்
பெண்டு பிள்ளைகளை விற்பாரும் - வீட்டைப்
பிரித்து வைக்கலை விற்பாரும்

கொங்கு ஆய்வு மையம் தொடர்ச்சியாகக் கொங்கு நாட்டு வெளிவராத சிற்றிலக்கியங்களைப் பதிப்பிக்க உள்ளது. இந்நூல் பதிப்புக்கு உறுதுணையாகச் சுவடிகள் அளித்தோருக்கும், நூல் அச்சாகுங்கால் உடனிருந்து உதவிய ஈரோடு டாக்டர். வெ. ஜீவானந்தம் அவர்களுக்கும், நூலைக் குறுகிய காலத்தில் அச்சிட்டளித்த ஈரோடு அறிவொளி பதிப்பகத்தாருக்கும் நன்றி உரியதாகுக.

தஞ்சாவூர் செ. இராசு.
*18.7.97.*

# புயல்காத்துப் பாட்டு

## காப்பு

சீர்பெருகும் ஐங்கரனைச் சிந்தை தனில்நினைந்து
கார்முகிலாம் காற்றடித்த காரணத்தைப் - பேர்பெருகும்
பங்கையனைப் போற்றிஎன்றும் பைந்தமிழில் பாடுகின்றேன்
கங்கைமகன் தந்திமுகன் காப்பு.

## நூல்

தன்னத் தனதனனா - தனதன
தனதன தனதன தனதன்னனா

1. பரிதாபி என்றுமேவந்த - வருஷத்தில்
பங்குனி மாதம்தேதி பதினாறில்
உருமங்கட் டியமுகிலால் - கோணக்காத்து
உளன்று உளன்றுமெத்த அடித்ததினால்
பெரிதான வீடுகளெல்லாம் - கோப்புடனே
பிரிந்ததுங் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே
வரியான வரிநாளிலே - காய்த்தபலன்
வாச்சுதடி என்றிருந்தேன் ஏச்சுதடியோ

2. சிங்காரமாய் வாங்கல்நகரில் - வைத்திருந்த
தென்னம்பிள்ளை அத்தனையும் வின்னமாச்சுதே
மங்காத காங்கயநாட்டில் - மேட்டுக்காட்டில்
மாளாத பருத்திஎல்லாம் கோலாகப்போச்சே
கொங்குதேச மேலைச்சீர்மையில் - கள்ளிக்கோட்டைக்
கோயம்புத்தூர்ப் பட்டணத்தில் ரொம்பமழையாம்
வங்கணமா நீலகிரியில் - சிறுமுகில்
மணல்காட்டு நெல்கள்எல்லாம் தனலாச்சுதே

3. அந்தியூர் பவானிப்போக்கிலே - சாலைமரம்
அடியோடெ விழுந்துதங்கே கெடிகலங்கி
சிந்தனை வராமலிருந்த - ஈரோட்டில்
செந்நெல்களும் வாழைப்பலன் சேதரொம்பவாம்

பந்திபந்தி யாயிருந்த - கூரைவீடெல்லாம்
பறக்குது காத்திலே இருக்காமல்
வந்தபலன் வீணாகப்போச்சு - இளம்பயிர்
மணலோடே தரையாய்த் தரையாச்சுதே

4. கன்னிவாடி விருப்பாச்சி - பழனிச்சீமை
கண்ணாடிப்புத் தூருமட்டும் காத்துகளில்லை
உன்னிதமாய்த் திண்டுக்கல்லோடே - தெற்குநோக்கி
ஓடவில்லை யாங்காற்றுச் சாடைதான்சற்றே
நன்னயஞ்சேர் கருவூரில் - பசுபதி
நாதரிட ஆலையத்தில் சேதரொம்பவாம்
இந்நிலஞ்சேர் சீலாப்புத்தூரு - கூத்தளையில்
இருந்த மரங்களெல்லாம் முறிந்ததங்கே

5. வாகுடன் திருப்பலாத்துறை - முசிறி
வழிகடந் தாமூர் தனிலேமெத்த
ஆகமங்கள் ஓதுகின்ற - பாப்பார்
அக்கிரார வீதியிலே வெள்ளம்நுழைந்து
பாகுமொழி மாதர்களெல்லாம் - வெள்ளத்திலே
பட்டபாடு சொல்லப்போனால் வெட்டாரவெளியாம்
கோகநகர் நங்கைபுரத்தில் - அப்பாவையன்
குத்தாரி நெல்லைவெள்ளம் கொண்டுசென்றதாம்

6. முத்தரசன் பேட்டைகடந்து - கூடமரெட்டி
மூடுபாலம் வந்துகாத்துச் சாடிநின்றதே
பொத்தல்வழி தெரியாமல் - அப்பாவையன்
போருவந்து மூடிப்பாலம் கீழ்விழுந்ததாம்
செத்திறந்த ஆடுமாடுகள் - ஆத்திலே
சேனையுண்டு போனதுதான் பாலம்வழியாய்
பத்தர்கள் மிகுந்துவாழும் - திருச்சிராப்
பள்ளியிலே வெள்ளமது ஆறுபோலோடி

7. பட்டணத்தார் வீடுகளெல்லாம் மேடுபள்ளம்
பாங்குடனே தான்பெருகி ஓடிநின்றதாம்
கோட்டையிலே தாய்மானசுவாமி - புராந்தகன்
கோபுரத்தின் மேற்கலசம் தான்அசைந்ததே
கேட்டசன மேபுலம்பினார் - இதுவென்ன
கெட்டகாத்து வந்ததென்று கேகேயென்றார்

8. சீரங்கத்தில் அரங்கேசர் - இன்னாள்மட்டும்
சிந்தனைவ ராமல்காத்துப் பந்தனம்செய்தார்
ஆரங்கள்ளைத் தசுவரெல்லாம் - மெத்தைவீடு
அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்
தாரங்களும் பிள்ளைகளுடன் - கூட்டிக்கொண்டு
தானடைந்து வேகமுடன் கூகூவென்றார்
ஊரெங்கும் அடித்தகாத்துக்குப் - பகவானை
உள்ளமதி லேநினைந்து வள்ளலேஎன்றார்

9. வாகுடனே தொண்டமான்சீமை - தன்னிலே
வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே
பாகுமொழி யானபெரிய - நாயகியைப்
பாங்குடனே துதிக்கின்ற பேர்களெல்லாம்
சேகரமாய் வைத்தமரங்கள் - அத்தனையும்
சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே
சோகமுடன் சோலையில்வாழ்ந்த - பட்சிசாதி
சோர்ந்து மனேகங்கோடி மாண்டுதாமங்கே

10. ஆர்புகழும் திருவையாற்றிலே - கோணக்காத்து
அந்தரமாய்த் தானடித்த விந்தையைக்கேளும்
சீரனமில் லாதவீடெல்லாம் - காத்திலே
தெரியாமல் போனதைத்தான் என்னசொல்லுவேன்
பார்புகழும் சேனைகளெல்லாம் - கோணக்காத்தைப்
பார்த்துமனம் நொந்துருகி ஆத்திமனத்தை

ஏர்கலப்பை மாடுகளில்லை - என்றுசொல்லி
ஏங்கிமனம் வாடிநொந்து தாங்கிமனத்தே

11. பஞ்சமான பஞ்சம்பிழைத்தோம் - இந்தப்
பாழுங்காத் தடித்ததற்கு ஆளாவதெப்போ
கொஞ்சுங்கிளி அன்னமயில்கள் - உலகத்தில்க்
கோடியுண்டு செத்ததுதான் ஓடிமயங்கி
ரஞ்சிதம்சேர் தஞ்சாவூரிலே - துளசிமகா
ராசருட மாளிகையும் தான்அசைந்ததே
அஞ்சுகம் பொருந்திவாழும் - சிதம்பரத்து
ஆலயத்தி லேகலசம் மேல்அசைந்ததே

12. குற்றாலம் குறுநாட்டுக்குள்ளே - கோணத்துக்காத்து
கும்பகும்ப லாய்அடித்து வம்புசெய்ததே
சுற்றாலைச் சுவரிடிந்ததே - ஊரிலுள்ள
சொகுசான பெண்கள்கெற்பம் உதிரக்கண்டதாம்
பத்தினிகள் கெற்பழிந்ததாம் - சமுத்திரத்தில்
பாங்குபெறும் கப்பல்வகை பாய்மரம்போச்சு
மஷ்த்தகங்கள் செத்திறந்ததே - கடலிலே
மாளாதகல் லுப்புகளும் நீறாழமாச்சு

13. கும்பகோணம் நாகப்பட்டணம் - தனிலிருக்கும்
கோமேத கம்விற்கும் செட்டிமார்களும்
தென்புடனே கப்பலேறித் - தென்கரையில்
திடலேறி முத்துரத்னம் வாங்கினந்தார்கள்
சம்பிரமுடன் கப்பல்களெல்லாம் - கடலிலே
தானடந்து வேகமுடன் வருகையிலே
கொம்புசத்திக் கோணக்காத்து - காலனைப்போல்
கோணமழை வந்துகப்பல் தான்கவிழ்ந்ததே

14. ஆறிரண்டு கப்பல்கவிழ்ந்து - அதிலிருக்கும்
ஆசைகொண்ட செட்டிமக்கள் மோசம்பொனார்கள்
சீருடனே செட்டிப்பெண்களும் - நம்மளுக்குச்

சிந்தை மகிழ்ரத்னம் வந்திடுமென்று
வீறுடனே தானிருந்தார்கள் - கப்பல்கவிழ்ந்து
வெள்ளகர் மோசம்போன சேதிகேட்டார்கள்
பேருபெற்ற செட்டிகளெல்லாம் - சாஸ்திரங்கள்
போதகமில் லாமல்செய்து ஒதிவைத்தார்கள்

15. நாமள்எப்ப டிப்பிழைப்பது - என்றுசொல்லி
நாட்டமுடன் கொட்டைநூற்க ராட்டைதேடினார்
கோமளஞ்சேர் புதுச்சேரியில் - சென்னபட்டணம்
கோட்டைக்கும் தாண்டிஅங்கே காத்தடித்ததே
பேய்மழைகள் பேய்ந்துவிட்டதே - பட்டணத்தில்
பெரிதான வீடுகளும் விழுந்துவிட்டதாம்
மாமரங்கள் பூவுதிர்ந்ததே - பழம்திங்கும்
மள்ளருக் கென்னசொல்லி உன்னிதஞ்செய்வார்

16. சென்னபட்டணம் கமுட்டியிலே - ஏழுதுரை
சேர்ந்திருந்து யோசனைகள் ஆய்ந்திருக்கையில்
கன்னல்போல் இடிகளிடித்துக் - கோணத்துக்காத்து
காருமழை போலப்பொங்கிச் சீறிநின்றதே
நன்னயமாய்த் துரைமார்கள் - நம்மள்வீடு
நலமுடன் போவோமென்று ஓட்டமெடுத்தார்
பன்னுதமிழ் அச்சுக்கூடத்தில் - கவிசொல்லும்
பைந்தமிழ்ப் புலவோரெல்லாம் அஞ்சிப்பயந்தார்

17. ஆர்க்காடு மைசூர்வரைக்கும் - கோணக்காத்து
அலரி அலரிமெத்த அடித்ததனால்
மார்க்கமான சாலையில்ப்போன - சனங்களெல்லாம்
மயங்கி மயங்கிமெத்தத் தவித்தார்கள்
சேர்க்கையாம் டெங்கணிக்கோட்டை - தருமபுரி
சேர்ந்திருந்த ஊர்கள்எல்லாம் காத்தடித்ததே
சார்நகர்கள் னாடர்தெலுங்கர் - மறையோர்கள்
தானிருந்த பேர்கள்கூடித் தான்புலம்பினார்

18. கும்பினியார் சேருவாமலை - அதிலிருக்கும்
கொப்பிக்கண்ணுக் காப்பிக்கொட்டைக் காய்ப்புதிர்ந்ததே
சம்பிரமுடன் சங்ககிரியில் - அதிலுள்ள
தாலுக்காவைச் சேர்ந்தகுடி யானவர்களும்
கும்பல்கும்ப லாகக்கூடினார் - மகத்தான
கோலமுள்ள கண்டிதேசம் போவோமென்றார்கள்
தெம்புடன்கட் டிச்சோர்கட்டியே - துருகத்தில்
சேர்ந்திருந்த குடிகளும் வாறோமென்றார்கள்

19. சேலத்திலே வாசங்கள்செய்யும் - குரங்குகள்
செத்திறந்து போனதுவும் எத்தனையோதான்
சாலத்துடன் வேலூருக்கு - வந்ததுரை
தானடுங்கிக் கூடாரம் அசைந்ததுவே
காலத்துட கொடுமையென்று -யினீஸ்ட்டாந்துரை
கால்நடுங்கிக் கைநடுங்கித் தான்புலம்பினார்
கோலத்துடன் சமாபந்தியில் - கணக்கெழுதும்
கோடானகோடிக் கணக்கரெல்லாம் ஓடியொழிந்தார்

20. பாங்குடன் திருச்செங்கோட்டிலே - இடப்பாகம்
பட்சமுடன் வைத்தஅர்த்த னாரீசரும்
ஆங்காரமாய் அடித்தகாத்திலே - நாங்களும்தான்
அந்தரத்தில் கோலெறிந்த அந்தகனானோம்
நாங்கள்எப் படிப்பிழைப்போம் - என்றுசொல்லி
நாட்டமுடன் செட்டிகளும் கூட்டங்கூடினார்
ஓங்கிவள ரும்பரமத்தி - குடிகளுக்கு
உண்மையுள்ள பலனெல்லாம் செம்மைகெட்டுதே

21. மண்டலஞ்சேர் நாமக்கல்லிலே - திருநாளுக்கு
வந்திருந்த சனங்களும் மதிமயங்கியே
மண்டியிட்டுத் தான்புலம்பினார் - இதுவென்ன
மாயமோ அபாயமென்று மாதர்களுந்தான்
அண்டர்கள் வணங்கிப்போற்றும் - தேர்ச்சீலை

அத்தனையும் பறந்ததே பந்திபந்தியாய்
தண்டமிழ் விளங்கும்கேளிக்கை - மண்டபத்தில்
தானிருக்கும் பந்தலெல்லாம் கீழ்விழுந்ததே

22. தெத்துக்காடு காளப்பநாயக்கன் - பட்டியிலே
செத்திறந்த ஆடுமாடு மெத்தவுமுண்டாம்
சித்தர்கள் பொருந்திவாழும் - கொல்லிமலை
சேர்ந்திருந்த நாடெல்லாம் காத்தடித்ததே
அத்தனார் அறப்பளீசர் - கோவிலிலிருக்கும்
அத்தனை சோங்குகளும் முறிந்துபோச்சுதே
பத்தரான மலையாளர் - இதுவென்ன
பக்கங்கெட்ட கோணக்காத்து இங்கேவந்ததே

23. கர்த்தனுக் கபயமென்றார்கள் - மலையாளர்
கால்மாடு தலைமாடா யேமாறினார்கள்
உத்தமதாத் தையங்கார்ப்பேட்டை - துறையூரில்
ஓங்கிவளர்ந் தோங்கும்செட்டி வாணியரெல்லாம்
மெத்தமனஞ் சலித்தாராம் - நாமளுந்தான்
மேலைமலை யாளமது போவோமென்றார்கள்
பத்தமுடன் எருமைப்பட்டியில் - பேய்ந்தமழை
பங்கய மனேகங்கோடி எங்குமில்லையே

24. பெத்திரெட்டி வீரம்மாளும் - கட்டிவைத்த
பேரான குளத்தில்நஞ்சை சாகுபளியும்
சித்தமுடன் இடையாறு - பாண்டமங்கலம்
செந்நெல்களும் வாழைமரம் சேதம்ரம்பவாம்
பொத்தனூர் புதுப்பாளையத்தில் - வைத்திருந்த
பொங்கமுடன் கொடிக்காலும் பங்கமாச்சுதே
இத்தனை மழையும்பெய்ததால் - ஆறுகுளத்து
ஏரியு மேநிரம்பி மெத்தவுமாச்சே

25. தென்னங்கொலை வாழைகமுகு - முகனூரில்
சேதமெத்த ஆச்சுதடி பாதகத்திகா

மான்மறைகள் பன்றிகளெல்லாம் - வனத்திலே
மடிந்த வகைவிபர மாகச்சொல்லுவேன்
ஏனமுடன் சிங்கங்களெல்லாம் - வனம்விட்டு
ஏகுவோ மென்றுசொல்லித் தாகமுடனே
வானரங்கள் பட்சிகளெல்லாம் - அண்டலோகம்
மானமட்டு மேபறந்து மாண்டுசெத்ததே

26. சீரான லோகங்கள்எல்லாம் - கொண்டிவைக்கச்
சித்திரமாய்ப் பேய்ந்துமழை மெத்தநொந்துதே
வகையான மாடுகளெல்லாம் - பட்டியோட
மாண்டது ஆடுடனே வேண்டியபேர்கள்
காரான பட்சிகளெல்லாம் - கோணக்
காத்தடித்துக் கானகத்தில் செத்திறந்ததே
தாராள மாகக்கூடி - வழிதனில்
தானடந்த பேர்கள்எல்லாம் தான்வருவாராம்

27. இப்படிக்கிச் சேதங்களானால் - குமரேசா
எப்படிப் பிழைத்துநாங்கள் ஒப்பிதமாவோம்
மெய்ப்புடன்வே லாயுதங்கொண்டு - வருகின்ற
விக்கினமெல் லாம்தீர்த்துக் கார்த்திடீரையா
கைக்குதவு மானமழையும் - தாறுகாலம்
காருபொங்கி மாதமூன்று மழைபெய்யவேணும்
சித்திரம் பொருந்திவாழும் - ஈரோடு
தாலுக்காவைச் சேர்ந்தவெங்க மாநகரிலே

28. மோதிரம் பொருந்திவேளாண் - சுப்பண
பூபதி யீன்றெடுத்த சாமிநாதன்தான்
வேதியர் வேளாளர்வாழும் - முகனூரில்
விந்தையுடன் குடிகொண் டிருக்கையிலே - வெகு
வேதனையால் வந்தகாத்துக்கு - சாமிநாதன்
விள்ளுகிறேன் செந்தமிழை யுள்ளுணர்ந்துமே
பூதலத்தில் சனங்களெல்லாம் - வாழ்கவென்று

பூமண்டலம் தழைத்தோங்கும் என்தமிழை

29. காதிலுற்றுக் கேட்டபேரெல்லாம் - மோட்சகதி
காணுவார்கள் கயிலாயம் பூணுவார்களே
மாதவனே சங்கராவாழி - அரிதிரு
மருக னாவுதித்த ஐய்ங்கரன்வாழி
சீதரன் ..... ...... ...........
சிந்தை மகிழ்ந்தெடுத்த கந்தனேவாழி!

முதல் ஏடு: காத்து நொண்டிச் சிந்து முற்றிற்று
குரோதி வருஷம் பங்குனி மாதம் 4 தேதி
வெத்திவேலுப் புலவனுக்கு உபாத்தியார்
நஞ்சப்ப ஐயர் எழுதியது. தாண்டப்பன் ஏடு

இரண்டாம் ஏடு :

இதைப் பார்த்து யெழுதியது ரங்கசாமிப் புலவர்
ரத்தாக்ஷி வருஷம் வைகாசி மாதம் 29 ம் தேதி
செங்கோடப் புலவனுக்கு ரங்கசாமிப் புலவன் எழுதியது
ஆண்டவர் துணையுண்டு. சுபம். கடவுள் துணை.

# பரிதாபி வருஷப் பஞ்சக்கும்மி

1. அந்தி முகன்பாதம் நித்தம் பணிந்து
அரிதான கும்மியொன்று அலங்கரிக்க
ஆறுமுக சாமியருள்
பாருலகி லேபுகழ்ந்து
கூறுதமிழ் பாடும்பஞ்சக் கும்மிசொல்ல

2. சத்தி வடிவேலர் சண்முக னார்சிவ
சங்கரர் பாலர் தயாளர்முன்னே
சரவணையி லேபெருகி
குறமகளை யேமருவு
முருகையர்தம் பாதமலர் போற்றிடுவோம்

3. பத்தித் தியானித்து பூசைசெய் துஉமை
பார்வதி பாலக னைப்பணிந்து
பஞ்சக்கும்மித் தருவுகள்
நெஞ்சில் தைரியமுடன்
வஞ்சிக்கும ரிகள்சொல்லி ஆடிடவே

4. குரோதன வருசம் மார்கழி மாதத்தில்
கூறு பஞ்சக்கும்மி பாருலகில்
குமுகுமென வாசனைகள்
கமகமென வீசுமெங்கும்
நமசிவாய முதலிமைந்தன் நற்றமிழே

5. வேந்தர் புகழும் வெண்ணந்தூர்த் தலத்திலே
விளங்கு செங்குந்த அருணாசலமும்
வெள்ளைக்கலை வாணியருள்
வள்ளலைப்போய் வரம்கேட்டுக்
கள்ளப்பஞ்சக் கும்மிசொன்ன கற்பனையே

6. குற்றம் பொறுத்த குருசாமி சீடன்
குலத்துச் செங்குந்த அருணாசலமும்

கும்மித் தரவுகள்பாட
நன்மைச் செயமாயுலகில்
செம்மைக்கு வந்துமிகச் செழித்திடவே

7. வரகவி ராயர் பிரபல மாய்ச்சொன்ன
வண்ணக் கும்மியதைக் கேட்டநல்லோர்
வையகத்தில் கவிவாணர்
பொய்பிழைகள் திருந்திநல்ல
மெய்படுத்திப் பாடிவைத்தால் மேன்மையுண்டே

8. அறியாத பாலகன் தெரியாத தால்பாடும்
பரியாசக் கும்மியைக் கேட்டுநல்லோர்
அதிபலமாய்ப் புகழ்ந்துஇந்தப்
பதியில்உள்ள கவிவாணர்
சுதியிசைந்து சொல்லிவைத்தால் சகிர்தமே

9. நித்தம் கொடுக்கும் கர்னன் பரிவாளன்
நிச்சயன் வேலப்பன் நஞ்சயன்சேய்
நிமிசகவி வாணரவர்
தவசுவரம் பெற்றுரைக்க
அமிசுடன்அரங் கேற்றமென்று சொல்லுவாரே

10. பரிதாபி வருசத்தில் காற்றடித் தவுடன்
பஞ்சகாலம்வந்து வஞ்சகமாய்
பத்துவள்ளத் தானியமும்
முத்துவெள்ளைச் சோளமதும்
எத்திசையும் முற்றும்விற்றுப் போச்சுதே

11. பிரமாதீ சாவருசம் வரம்வாங்கிப் பெற்றபேர்
அரமானத் துச்சோளம் அளக்கவென்று
பிச்சைப்படி கொண்டுவந்து
பச்சைக்கம்பு துவ்வரைகொள்ளு
வைத்துக்கொண்டு வர்த்தகரும் வாங்குவரே

12. ஆனந்த வருசத்தில் தானதர் மம்பிச்சை
ஆரும் கொடுப்பர் அறுப்பில்வந்தால்
அன்றுமுதல் இன்னளவும்
பண்ணையத்துக் குடிகள்சும்மா
ஒண்ணும் கொடுப்பதே இல்லையென்றார்

13. ராட்சத வருசத்தில் காய்ச்சல் குளிராலே
ரம்பச் சனங்கள் வருத்தப்பட்டு
ராமர்செய லால்உலகில்
பூமிபிர பஞ்சமதில்
சோமசுந்த தரத்தன்மை யாச்சுதென்றார்

14. நளவரு சம்தன்னில் பளபள வென்றே
ரம்பக் காலங்கள் வெறிச்சல்தட்டி
நாட்டில்உள்ள கவுண்டரெல்லாம்
காட்டில்பலன் இல்லையென்று
கோர்ட்டுத்துரை மாரிடத்தில் சென்றுரைத்தார்

15. பிங்கள வருசத்தில் எங்கும்பஞ் சகாலம்
பிச்சைக் காரர்லட்சம் இச்சைப்பட்டு
பிர்மகற்ப னையிதுவோ
தர்மம்எப்போ மெய்யாகும்
கர்மவினைக் கென்னசெய்வோம் கர்த்தனேயென்றார்

16. காளத்தி வருசத்தில் சோளம் வந்தவுடன்
கண்டகம் நாலு ரூபாயாச்சு
காங்கயத்துச் சனங்கள்வந்து
வீங்கமுண்டப் பசங்களெல்லாம்
வாங்கவும் பஞ்சம்மிக வளர்ந்ததே

17. சித்திராத்திரி வருசத்தில் பத்திரத் துடன்இந்தச்
சீமையில் உள்ள சனங்கள்எல்லாம்
செலவுரம்பச் செய்யாமல்
விலைகுறைந்து போச்சுதென்று
உலகமெங் கும்சுற்றி உலவினாரே

18. ரவுத்திரி வருசத்தில் தவறிய காலமாய்
எவத்திற்கும் வெள்ளாமை பூச்சியமாய்
ரண்டுகிணறு மூணுதோட்டம்
மண்டலத்தில் கவுண்டரெல்லாம்
கொண்டுவந்து பூட்டுமென்று கோரினாரே

19. துன்மதி வருசத்தில் நன்மையா கும்என்று
அம்மனைக் கேட்டார் அனைவோர்களும்
சுற்றிவந் தொருகவுளி
மத்திசமாய்ச் சொல்லிவிட்டு
நித்யநலம் சொல்லவில்லை சத்தியமாய்

20. துந்துபி வருசத்தில் தெந்தனம் பாடியே
வந்தவெள் ளாமை வறண்டுபோச்சு
துக்கப்பட்டுப் போச்சுஇந்த
மக்கள்படும் பாட்டிலிந்த
வெட்கங்கெட்ட காலத்திலே வெள்ளாமையே

21. ருத்திரோத் காரி வருசத்தி லேசீலை
ரூபாயிக் கஞ்சு முழவேட்டி
ருசுவாகிச் செங்குந்தர்
பசியாமல் அன்னம்உண்ணும்
நெசவாயி ரங்கோடி யாச்சுதையா

22. ரத்தாட்சி வருசத்தில் கர்த்தனைத் துதிசெய்து
லாபங்கள் ரொம்பக் கிடைக்குமென்று
ரண்டுதறி மூணுதறி
கண்டவர்கள் போட்டுநெசு
கொண்டுபோய் விற்கலாபம் குறைவாச்சு

23. செட்டிவர்த் தகர்கள் செங்குந்த முதலிக்கு
கெட்டகா லத்தொன்றும் அட்டியில்லை
சேதம்ரொம்பப் போகாமல்
சீதாலட்சுமிக் கற்பிதமாய்
பூதலத்தில் வாழ்ந்திருந்தார் பூசிதமாய்

24. குரோதன வருசத்தில் விரோசன மாய்ச்சனம்
கூடிக்கூடிப் பேசி வாடிநின்று
கூழூரக் கிரிதிங்க
நாளுமல்லோ வந்ததடி
பாழுமுண்டை காலமையா பகவானே

25. அட்சய வருசத்தில் பிச்சைக்கா ரர்களும்
ஆறுப ணத்துக்கு ஒண்ணரைவள்ளம்
அந்தணர் புரோகிதர்கள்
செந்தமிழ்சேர் பாவலர்கள்
வந்தசனம் அத்தனையும் வாங்கிடுமே

26. அட்சய வருசத்துப் பஞ்சத்தில் தானியம்
அரைக்காலுக் கொருபடி தானளக்க
ஆஸ்பரியக் காரர்எல்லாம்
மோசம்வந்து நேர்ந்ததென்று
ஈஸ்வரியைக் கைதொழுதால் செல்வமுண்டாம்

27. அட்சய வருஷம் ஆவணி மாதம்
பிச்சைக்கா ரர்மேலே பட்சம்வைத்து
அன்னக்கஞ்சி காச்சியன்று
மன்னர்துரை மார்அறிந்து
பொன்னுச்சேல பட்டணத்தில் போட்டுவைத்தார்

28. பச்சம்வைத் தேமன்னர் இச்சைகொண் டுநல்ல
பாலபிள் ளைசிரஸ் தார்கள்வந்து
பசிவந்த பேர்களுக்கு
பொசிப்புத்தர வேணுமென்று
நெசப்படுத்திச் சீட்டெழுதித் தான்கொடுத்தார்

29. அந்த வருசம் அனேக சனங்கள்
அட்சய வருசப்பஞ்சம் தாட்டுச்சு
அம்பலவர் வந்துநல்ல
தென்பழனி வேலவரும்
கம்பசித்ர மாகஇதைக் கண்டுவைத்தார்.

வாய்க்கரிசிக்கு இல்லையென்று
போக்கிரி த்தனங்கள்பேசும்
யோக்கியமில்லாப் பேர்கள்லச்சம் உலகத்திலே

13. கத்த பெரியோர்கள் வித்துவான் பாடினால்
கல்விக்கு இரங்கிக் கனவரிசை
கணக்கமணி யாரர்களும்
குணத்துடனே சாதம்இட்டுப்
பணத்தைக்காசைக் கொடுத்திடுவார் பாக்கியமுள்ளோர்

14. எந்தச் சனங்களும் இந்தப்பஞ் சத்திலே
ஏக்கம் பிடித்தன்ன வீக்கத்தினால்
இளைத்துப் போயித்ரேகம்
களைத்துப்போய்க் கீழ்விழுந்து
வளைத்துவளைத் துநடப்பார் வகுகோடியே

15. பாத்த முகமெல்லாம் வேத்த முகமாகச்
சோத்துக் கலையவே சோம்பிநின்று
பல்லைக்கெஞ்சிக் கொண்டுசும்மா
வல்லக்காலம் என்றுநம்ம
தில்லைக்காளி அம்மனையும் தியானம்செய்தார்

16. இன்றைக்கு இருப்போரை நாளைக்குக் காணோமே
என்றைக்கிந் தக்கலி தீரும்என்று
ஈசுவரனைப் போற்றிசெய்தால்
ஆசுபரியம் ஆயுசுமே
தேசிகனார் வரம்கொடுப்பார் தெரிந்துகொள்ளும்

17. சாதத்தைச் சாப்பிட்டு வேதம் படிப்போர்கள்
நீதம்தப் பாமலே போகுதென்று
சண்டைபிடிப் பார்கள்சிலர்
பெண்டாட்டியார் தன்னிடத்தில்
முண்டைப்பிள்ளை திங்கவைச்சுக் கொண்டாளென்பர்
கஞ்சியில்லை என்றழுது கலங்குவார்கள்

18. பானையைப் பார்த்துக்கொள் ஈனங்கெட் டையா
நானென்ன நாளைக்குச் செய்வதென்றாள்
பழையசோத்துக்கு அழுவார்களே
நிதமும்களையாய் இருக்குதென்று
சொல்லுமிந்த இழவுக்கென்ன செய்வதென்றே

19. அன்னத்தைக் கண்டாலும் பொன்னுச்சாமி யைப்போல்
சின்னப்பட்ட காலம் வந்தபின்பு
ஆசையாய் இருக்குதடி
ஏசவேண்டாம் இன்னொருக்கால்
பூசைபண்ணி வாரேன்கொஞ்சம் போடும்என்பார்

20. நெல்லஞ்சோத் தைக்கண்டால் நல்லசாமி யைப்போல்
அல்லும் பகலும் இருக்குதென்று
நேரிழையாள் தன்னிடத்தில்
சாறுகூட வேண்டாம்போடி
சோறுபத்த வில்லையென்று சொல்வார்சிலர்

21. பாப்பானைக் கூப்பிட்டு பஞ்சாங்கம் கேட்கவும்
பஞ்சம்என் றைக்குத் தெளியும்என்று
பாத்துச்சொல்ல மாட்டேன்என்று
நேத்துக்கஞ்சி காச்சவில்லை
சோத்துக்குச்சோ ளம்கொடுத்தால் சொல்வேனென்றார்

22. மாட்டுக்குத் தீவனம் உண்டாகுமா எங்கள்
காட்டுக்குள் பஞ்சாங்கம் பாரும்என்றால்
மகாதேவர் மழைபொழிய
சகாதேவன் சாஸ்திரத்தில்
சிவலோக சோசியர்கள் தெரியாதென்றார்

23. கிணத்துக்குத் தண்ணீர்கள் இல்லாத காலத்தில்
பணத்தைக் கொடுத்துப்பாழ் ஆச்சுதென்று
கெஞ்சிப்பிச்சை எடுக்கவந்த
பஞ்சைக்குடி யானவர்கள்

கஞ்சியில்லை என்றழுது கலங்குவார்கள்

24. ஒட்டனைக் கூப்பிட்டு வெட்டடா கிணத்தையும்
ஒருமேட்டு உன்கிசத் தாலேஎன்றால்
ஓங்கிவெட்ட மாட்டேன்சாமி
எங்கள்கொத் தளங்கள்தூக்க
பாங்கழிந்த காலத்தில்பலன் இல்லைஎன்றான்

25. தட்டானும் கொட்டாரப் பட்டடை. வேலைகள்
தாது வருசத்தில் இல்லைஎன்று
தங்கநகை பார்க்கும்கண்ணால்
கொங்குச்சோளம் நல்லதென்று
செங்கையிலே மாத்துரைத்தான் தேசிகனே

26. கொல்லன் உலைக்குப்போய் எல்லவு ரும்கூடி
கொழுவடித் துத்தாடா என்றுசொன்னால்
கோணக்கொழு வடிக்கெனக்குப்
பிராணபலம் இல்லைஐயா
ஆணத்தொடு சாதமில்லை அப்பாஎன்றான்

27. உழுகும் கலப்பை நுகத்தடி செய்கின்ற
ஊருத்தச் சாசாரி உருகிமனம்
ஊணுவலு இல்லாதே
நாணுதெந்தன் கைசலித்து
ஆணுவம்அட் சயவரும் போச்சுதென்றார்

28. அம்பட்ட நாவிதன் செம்பட்ட மீசையை
அறுக்கும் கத்தியை அடகுவைத்து
அரைப்பணத்துச் சோளம்வாங்கி
பருப்புடனே கஞ்சிகாச்சி
நெறைப்பட வில்லைசாமி நேத்தைக்கென்றான்

29. ஏகாழி வண்ணானும் நோகாமல் சீலையை
எடுத்துக் கசக்கிப் புழிஞ்சுபோட்டு

சென்னெல்கஞ்சி நித்தம்சிக்க வில்லைஎன்றான்

30. மண்ணுடை யானைப்போய் பண்ணிக் கொடுபானை
மாகாளி யம்மன்பொங் கலுக்கென்றால்
மணியாசுப் பலகைவித்துப்
பணியாரம் வாங்கித்தின்று
துணிவரம் போச்சுசூளை வைக்கவென்றான்

31. தோட்டியைக் கூப்பிட்டுச் சுவர்ணாதா யப்பணம்
நாட்டுக்கந் தாயமும் கேளும்என்றால்
சோற்றுக்கஞ்சிக்கு ஆதரவாய்
நேத்துக்குலுக் குத்தடியை
சாத்துக்கூத்தை வாங்கவித்தேன் சாமிஎன்றான்

32. சாணார மூப்பர்கள் ஏணியெல் லாம்வித்து
வாணாள் வளர்க்கும்கள் வத்தினபின்
சந்தையிலே கொண்டுபோயி
சொந்தமரக் கத்திவித்தேன்
இந்தப்பனை ஏறஎன்னால் ஆகாதுஎன்றான்

33. வாணியச் செக்கானும் காணம் புண்ணாக்கை
வண்டித்தலை ரூபாய்க்கு வாங்கிவித்து
வறண்டபஞ்ச காலத்திலே
இரண்டுவெள்ளத் தவசம்வாங்கி
... ... ... ... ... .....

34. வையகம் தன்னிலே வடுகநாய்க் கர்களும்
ஐயமெடுத்து அலைந்துதிரிந்து
வளையல்விற்கப் போனதாவில்
களையா யிருக்குதம்மா
பழையசோத்துத் தண்ணிகொஞ்சம் பாரும்என்பார்

35. சேடச்செட்டி யார்கள் வேடைக்கா லத்திலே
சிவப்புக் கறுப்பு முதலிழந்து

35. சேடச்செட்டி யார்கள் வேடைக்கா லத்திலே
சிவப்புக் கறுப்பு முதலிழந்து
தினமும்கஞ்சிப் பணம்கொடுக்க
மனமகிழ்ந்தி டும்துரையே
அனமும்சாதத் தோடேபோடும் ஐயாஎன்பார்

36. பட்டு நூலுக்காரச் செட்டியார் கள்சிலர்
கட்டும் சவுளிக் கடையைவிட்டு
பஞ்சக்கலி யாலேநொந்து
கஞ்சித்தொட்டிக்கு உள்ளேவந்து
கெஞ்சிப்பிச்சை கேட்டார்கெடி மன்னர்சிலர்

37. சேணியச் செட்டிகள் வேணதெல் லாம்வித்து
நாணமில் லாதே நலிந்துமனம்
செங்கோல்அர சாளும்மன்னர்
தங்கள்முன்னே வந்துநின்று
எங்கள்தறிக்கு நூல்பட்டு ஈயும்என்பார்

38. கைக்கோளத் தம்பிகள் விற்காத தைவிற்றுக்
காலம் அற்றகொடுங் காலத்திலே
கடன்அதிக மாய்ப்பட்டுப்
புடவைமர மும்விற்றுக்
கைநிறைய மயில்இறகைக் கொண்டார்களே

40. இண்ணெக்குச் சோத்துக்கு இல்லையே ஈசுரா
மண்ணைத் தின்போமா மகாதேவா
எரந்துகுடிப்போ மென்றாலும்
பரந்தஎட்டுத் திக்கில்எங்கும்
அருந்தஒன்றும் இல்லைஎன்று அழுவார்சிலர்

41. காட்டுத் தழைவந்தால் காலம் தெளியுமென்று
வீட்டுக்கு வீடு விசாரமிட்டுக்
கன்னிக்கும கிகள்எல்லாம்
பன்னிப்பன்னிப் பொறிப்போமென்று

உன்னிதமாய்ப் பேசிக்கொண்டு உருண்டழுதார்

42. முத்துச்சம் பாநெல்லுக் குத்திச் சமைத்திடும்
முதலிமார்ப் பெண்கள் மூக்கால்அழுது
அறுத்துப்போட்ட கட்டச்
சோளச்சோர் கர்த்தனே
பத்தாதே போச்சென்று அழுகலுற்றார்

43. சன்னச்சம் பாச்சாதம் வண்ணக் கறியுடன்
சாப்பிட்டு ஏப்பமிட் டோர்கள்எல்லாம்
தவிட்டுச்சோ ளக்களியில்
தெவட்டிரக் கிரிபோட்டு
தெவிட்டத்திங்க இல்லையென்று தேம்புவார்கள்

44. சீரகச்சம் பாச்சாதம் மேவிச் சமைத்திடும்
சித்திரக் கிளிமாதர் எல்லவரும்
திருக்கேவுரு ஆரியங்கள்
அரைக்காம லேஉடைத்து
பரக்கக்காச் சிக்குடித்தார் பாருங்கடி

45. குண்டஞ்சம் பாச்சாதம் என்னைக்கும் சாப்பிடும்
மண்டலத் தில்குண சீலரெல்லாம்
கூழுரக் கிரிபோட்டு
பாழுமுண்டை உண்ணும்என்றாள்
நாழிப்பசி தாங்கலையே நாதாஎன்றார்

46. கல்லமுத் தாநெல்லு நல்லாச் சமைத்திடும்
காராளப் பெண்கள்கண் ணீர்வடித்து
கட்டைச்சோ ளக்களிகள்
கொட்டைக்காய் போலவந்து
வட்டலிலே போடவிதி வந்ததென்பார்

47. ஆதித்த வாரம்ஆட் டயாம்பட்டிச் சந்தையில்
ஆரியம் சோளம் அரிதாகி

அயோத்திப்பட்ணம் சந்தைக்கு
வையகத்துச் சனங்கள்எல்லாம்
பையெடுத்துச் தோள்போட்டுப் பறக்கலுற்றார்

48. ஆதிசோ மவாரம் அமரகோ ளிச்சந்தை
ஆதிக்கம் அகவிலைகள் என்றுசொல்லி
ஆட்டையாம்பட் டிக்கவுண்டர்
மாட்டெருத்தை ஓட்டிப்போயி
ஈட்டியே பிடிக்கவிலை குறைந்ததய்யா

49. தப்பைக் குறவர்கள் உப்பிலிய நாயக்கர்
அற்ப காலத்தில் அவதிப்பட்டு
சங்கரா மகாதேவா
உங்கள்செய லால்உலகம்
எங்கும்வெறிச்ச காலம்என்று ஏசினார்

50. திருச்செங்கோட் டுச்செவ்வாய்ச் சந்தையி லேசோளம்
சிக்காதே போச்சுதடி பொற்கொடியே
திங்களூருச் சந்தைக்கினி
தங்கல்போட்டுக் கொண்டாகிலும்
அங்கேபோய்க் கொள்வோமென்று அழுவார்சிலர்

51. சத்திரம் புதன்கிழமைச் சந்தையில் ஆரியம்
சிக்காது போச்சுதடி பொற்கொடியே
தாங்கள்கொண் டாந்தபடியில்
பாங்குடனே அளக்கக்கண்டு
வீங்கிமுண்டைச் சனங்கள்போய் விழுவார்சிலர்

52. மாநிலத் தில்பஞ்ச கால மயக்கத்தால்
மலையாளக் கவுண்டர் நத்தமருடையார்
மனமகிழ்ந்து கலியாணம்
தனமிருந்து செய்வோர்களும்
வனவாசம் போய்மடிந்தார் வெகுகோடியே

53. சக்கிலிப் பையனைத் தான்காலுக் குச்செருப்பு
தைத்துக் கொடும்என்று தான்கேட்டால்
சந்தையிலே கொண்டுபோயி
சொந்தஉளி ஆசுவித்து
வெந்தகரி வாங்கித்தின்றேன் வாரில்லையென்றான்

54. நித்தம் அரைப்படி சோளம் சிக்கினாலும்
மெத்தச்சந் தோசம்பார் மேதினியில்
நிலாவரையைக் கொண்டுவந்து
பலகாரம் போல்வருத்து
உலையிலிடச் சிலகாலம் ஒழியும்என்பார்

55. நெஞ்சுக் கிலேசமாய்ப் பஞ்சகா லத்திலே
நிலாவரை விதையைக் கொண்டுவந்து
நெறிச்சுக்களி கிண்டியதும்
மறிச்சொருக்கால் சிக்கவில்லை
வெறிச்சகாலம் கொடுமைசொன்னால் வெட்கமில்லே

56. சீனிக் கத்தாழைக் கிழங்கைத் தின்றுமிகத்
திரேகம் மெலிந்து திகில்பிடித்து
சிவசிவா மகாதேவா
தவசமுடிந் ததுஇனிமேல்
வவுசுவர எங்களுக்கு வரங்கொடென்பார்

57. பஞ்சத்தைக் கண்டந்தப் படர்ச்சது ரைப்பழம்
கொஞ்சங் கூடச்சிக்க வில்லைஎன்று
பாவையர்கள் புருசரெல்லாம்
நாவரண்டு போய்அலைந்து
ஆவலுடன் வந்துசும்மா அழுவாரே

58. கூந்தல் பனையூனை இந்தப்பஞ் சத்திலே
கொண்டாந்து இடித்துக் கூழுக்காச்சிக்
குடிச்சுப்பிழைக் காதசனம்
அடிச்சுக்கொல்லும் வேதியிலே

மடிச்சுப்பிட்டாள் வண்ணலட்சம் மாகாளி

59. முன்னை மரத்தின்மேல் வண்ணலட் சம்பெண்கள்
அன்னப்பட் சிகள்போல் ஏறிக்கொண்டு
முந்தித் தழைந்தகொம்பில்
பிந்தித்தழை இல்லைஎன்று
அந்திபகல் எடுத்தார் அரும்பதையும்

60. வாலைக் குமரிகள் சூலுப் படாமலே
காலுச் சாரிப்போயி வையகத்தில்
வண்ணச் சீனிக்கிழங்கைக்
கன்னமிட்டுக் கொண்டுவந்து
பொன்னுப்போல் சமைத்துப் பொசிக்கலுற்றார்

61. கானகத் தில்உள்ள காரைத் தழைகளை
வானரம் போல்வளைத் துப்பறித்துக்
கஞ்சித்தண்ணிக் காதரவாய்
பஞ்சத்திற்குத் தின்போமென்று
வஞ்சிக்கும ரிகள்சொல்லி வாயிளித்தார்

62. காட்டுக்கொள் வேவுச்சு மூட்டுக்குட் டிஎன்னக்
காலோஞ்சு போகும்கஞ்சி காரருக்கு
கருப்பட்டி வெல்லம்போட்டு
பருப்பாட்டி ஒருநாளைக்கு
ஒருபத்த கருவியென்றாள் ஒருமடந்தை

63. மத்தங்காய்ப் புல்லரி சிச்சாதம் சாப்பிட்டு
மெத்தத் திரேகம் மெலிந்துஉடல்
மன்மதனைப் போலிருந்த
தன்மகுண சீலர்எல்லாம்
குன்மநோவுக் காரனைப்போல் குன்றினாரே

64. கல்லிச்சிக் காய்களை நல்லிச்சை யாகவே
காலக் கொடுமையி னால்பொறித்து

களிக்குப்போட்டுத் திங்காதே
புளிக்குப்பதி லாய்ச்சமைத்து
வழிச்சு வழிச்சுத்தின்று வாய்துப்பினார்

65. ஆண்பிள்ளை கள்எல்லாம் பெண்பிள்ளை யைப்பார்த்து
அன்னத் துயரத்தால் என்னசொல்வார்
ஆசைவலைக் கடல்இருக்கப்
பாசமெல்லாம் விலக்கிமறு
தேசம்போய்ப் பிழைப்பமடி தேன்மொழியே

66. பொம்பிள்ளை கள்எல்லாம் ஆண்பிள்ளை யைப்பார்த்து
நம்பிள்ளை சோத்துக்கு அழுகுதென்றால்
பொல்லாத காலத்திலே
வல்லாண்மை யற்றமுண்டை
எல்லார்க்கும் சோத்துக்கெங்கே போவதென்றான்

67. கும்பகோ ணத்துக்குக் குடிபோவோம் என்று
குழந்தை எடுத்தொன்றைத் தான்நடத்தி
கூடைச்சுமை தலையில்வைத்து
வீடுவிட்டுப் போறோமென்று
ஆடல்புரி அம்பலவர் அடிதொழுதார்

68. சத்திரம் ரெட்டியார் சத்திரத் தில்அன்னம்
சகலருக் கும்போடு றார்கள்என்று
சாப்பிட்டிலைப் பாறியபின்
ஏப்பம்விட்ட தன்பிறகு
மூப்புவந்த தென்றுமனம் முடுகிநடந்தார்

69. ஐய்யம் பாளையத்துச் சத்திரத் தில்அன்னம்
அந்நண ருக்குப் போடுறாரென்று
ஆறெங்கும் சூழ்ந்திடும்
சீரங்கப் பாதையில்
வாரசனம் வண்ணலட்சம் மாகோடியே

70\. கபிஸ்தலம் மூப்பனார் சத்திரத் தில்பல
காய்கறி அன்னமும் சாப்பிடலாம்
கடல்துறைக்குப் போய்ப்பிழைக்க
விடைகொடுக்கச் சிவனாரை
அடைவுடன் வேண்டினர் அனேகசனம்

71\. கெண்டிச்சீ மைக்குப்போய் மண்டலத் தில்சனம்
அண்டிப் பிழைக்காது அவதிப்பட்டு
கெடும்பாடு பட்டலைந்து
கொடுங்காலக் கொடுமையெல்லாம்
கெடுங்காலம் வந்ததென்று வினவினாரே

72\. சர்க்கார் துரைமார்கள் தாது வருசம்
சனங்கள் படும்துய ரம்பார்த்து
சந்தோச மாயிருக்கும்
அந்தகர்ஊ னர்களுக்கும்
வந்துலகத் தார்க்கும்கஞ்சி வார்த்தார்களே

73\. கோர்ட்டார் முத்திரைப் படியில் அளக்காமல்
குறைச்சல் படியில் அளந்தவனை
கொண்டுபோயி அட்சணத்தில்
தண்டனைகள் செய்வோமென்றார்
மண்டலத்தி லேதுரை மன்னரெல்லாம்

74\. கஞ்சித்தொட் டிப்பணம் வாங்கித்தின் றேசும்மா
காலோஞ்சு போச்சுதென்று பூலோகத்தார்
கணக்கமணி யாரர்களும்
மணத்துடனே சாதமிட்டு
குணத்துடனே சீட்டெழுதிக் கொடுங்கள்என்றார்

75\. பிருசன்பெஞ் சாதிகள் கருசனம் ஈசுவர
வருசம் பிறந்ததே போச்சுதென்று
பீத்தல்துணி யைவிரித்துச்

சோத்தைப்போடு சாமியென்று
காத்துக்கொண்டார் கஞ்சித்தொட்டிக் காரரிடம்

76. கெர்ப்பத்தில் கருவற்று அற்பகா லம்வர
இப்பப்பிள் ளைப்பேறு இல்லைஎன்று
கெடியாளும் மன்னர்கிட்டே
அடியாளும் வந்துநின்று
படியளக்க வேணுமென்று பல்லிளித்தார்

77. ஆசைக் கடலற்று மாசற்றுப் போகவும்
தேசத்துப் பஞ்சத்தில் தெரிவையர்கள்
அம்புவியில் பிள்ளைப்பேறு
இன்பமுடன் இல்லையென்று
தன்புருசன் பெஞ்சாதியும் தானழுதார்

78. மச்சுனன் வீட்டுக்கு இச்சையா கப்போயி
கொச்சையாய்ப் போச்சுதே என்றுசொல்லி
மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்
சாப்பாடுகள் இல்லையினி
எப்பப்போறீர் என்றுசொல்லி ஏசுவாராம்

79. ஊருக்கு வந்தஉறவின் முறையாருக்கு
ஊசப் பழையசோறு தானுமில்லை
உங்கார்ந்து கொண்டுசும்மா
வெங்காந்தாற் போலிருந்து
தங்காமல் போறேனென்று தயங்குவாரே

80. வீட்டுக்கு வந்த விருந்தா ளிகளிடம்
பாட்டுப் பழமைகள் பேசிக்கொண்டு
விசாரமுட னேஉப
சாரமுடன் பேசவும்வை
தாலும்சாதம் இல்லையென்று வாயிளித்தார்

81. சம்பந்தி வீட்டுக் கலியாணத் தில்ரொம்ப
சாப்பிட லாம்என்று போயிருக்க
சனங்கள்ரொம்ப வந்திட்டதோர்
அனமும்கூட இல்லைமச்சான்
மனங்கலங்கா தேமறுசோறு இல்லையென்றார்

82. பொங்கலுக் குவந்து தங்கல்போட் டுக்கொண்டால்
போசனத் துக்கென்ன செய்வமென்று
பொல்லாத காலமென்று
எல்லாமே பேசஅவன்
சொல்லாதே போகத்துணை இல்லையென்றான்

83. செட்டு மிகுந்தெங் கும்கெட்ட தகவில்லை
செவந்த நெல்சோளம் குறைந்தளக்க
சேலம்கடைக் காரர்வெளிச்
சேலம்வண்டி ஆரியங்கள்
காலுருபாய்க்கு அஞ்சுபடி காணோமென்பார்

84. தஞ்சை நகர்ச்சீமை அஞ்சாது என்றைக்கும்
பஞ்ச காலமென்று கண்டதில்லை
தருவுதப்பிப் போயிஇப்போ
தெருவுகடைக் காரர்களும்
குருவிநெல் அரிசிவிலை குறைச்சல்என்றார்

85. ராசா முதலியார் தேசம் புகழ்பெற்ற
ராச்சியத் தில்உள்ள தானியங்கள்
ரசவர்க்கமெல் லாம்பிடித்து
திசைகள்எட் டும்கொண்ட
புசபலம் பெற்றதுரைகள் புண்ணியவான்.



ஓவிய உதவி:
சுதந்திரப் போர்வீரர் ஆர்யா